ASS

# முழு ஆண்டுப் பொதுத்தேர்வு – 2025

8 - ஆம் வகுப்பு

## அறிவியல்

8 1 1 6 0 0

நேரம் : 2.30 மணி மதிப்பெண்கள் :100

**I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 15 X 1= 15

1. கீழ்க்கண்டவற்றுள் எது ஆங்கிலேய அலகு முறை? அ) CGS ஆ) MKS இ) FPS ஈ) SI
2. கீழ்கண்டவற்றுள் எது அதிக பாகுநிலை உடையது?
   அ) கிரீஸ் ஆ) நீர் இ) தேங்காய் எண்ணெய் ஈ) நெய்
3. திரவ நிலையிலிருந்து திட நிலைக்கு மாறும் நிகழ்விற்கு ............... என்று பெயர்.
   அ) பதங்கமாதல் ஆ) குளிர்வித்தல் இ) உறைதல் ஈ) படிதல்
4. ஒரு எளிய மின்சுற்றை அமைக்கத் தேவையான மின் கூறுகள் யாவை?
   அ) ஆற்றல் மூலம், மின்கலம், மின்தடை ஆ) ஆற்றல் மூலம், மின் கம்பி, சாவி
   இ) ஆற்றல் மூலம், மின்கம்பி ஈ) மின்கலம், மின்கம்பி, சாவி
5. ஒலி அலைகளின் வீச்சு இதைத் தீர்மானிக்கிறது? அ) வேகம் ஆ) சுருதி இ) உரப்பு ஈ) அதிர்வெண்
6. பின்வருவனவற்றுள் காந்தத்தால் கவரப்படும் பொருள் .......... .
   அ) மரப்பொருள்கள் ஆ) ஏதேனும் ஓர் உலகம் இ) தாமிரம் ஈ) இரும்பு மற்றும் எஃகு
7. சிவப்புக் கோள் என்று அழைக்கப்படுவது .......... .
   அ) புதன் ஆ) வெள்ளி இ) பூமி ஈ) செவ்வாய்
8. பிரைன் என்பது .................. இன் அடர் கரைசல் ஆகும்.
   அ) சோடியம் சல்பேட் ஆ) சோடியம் குளோரைடு இ) கால்சியம் குளோரைடு ஈ) சோடியம் புரோமைடு
9. காற்றேற்றம் செய்யப்பட்ட நீரில் ...................... உள்ளது.
   அ) காற்று ஆ) ஆக்சிஜன் இ) கார்பன் டை ஆக்சைடு ஈ) நைட்ரஜன்
10. எந்த வெப்பநிலையில் நீர் பனிக்கட்டியாக மாற்றமடையும்?
    அ) 0°C ஆ) 100°C இ) 102°C ஈ) 98°C
11. நாம் பல் துலக்குவதற்கு பற்பசையைப் பயன்படுத்துகிறோம். ஏனெனில் அது ................ தன்மை கொண்டது.
    அ) காரம் ஆ) அமிலம் இ) காரம் மற்றும் அமிலம் ஈ) ஏதுமில்லை
12. பாக்டீரியாக்கள் வடிவத்தின் அடிப்படையில் ................... பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.
    அ) 2 ஆ) 3 இ) 4 ஈ) 5
13. நீருக்கடியில் நீந்துபவர்கள் ஏன் காலில் துடுப்பு போன்ற ஃபிளிப்பர்களை அணிகிறார்கள்?
    அ) தண்ணீரில் எளிதாக நீந்த ஆ) ஒரு மீன் போல காணப்பட
    இ) நீரின் மேற்பரப்பில் நடக்க ஈ) கடலின் அடிப்பகுதியில் நடக்க (கடல் படுக்கை)
14. மண்ணில் விதைகளை இடும் செயல்முறையின் பெயர் ..................... .
    அ) உழுதல் ஆ) விதைத்தல் இ) பயிர்பெருக்கம் ஈ) பயிர்ச் சுழற்சி
15. சிவப்பு தரவு புத்தகம் .................... பற்றிய பட்டியலை வழங்குகிறது.
    அ) உள்ளூர் இனங்கள் ஆ) அழிந்து போன இனங்கள் இ) இயற்கை இனங்கள் ஈ) இவை எதுவுமில்லை

**II கோடிட்ட இடங்களை நிரப்புக.** 10 X 1 = 10

16. கண் மருத்துவர் கண்களைப் பரிசோதிக்கப் பயன்படுத்தும் ஆடி ....................... .
17. மின்னல் தாக்குதலில் இருந்து கட்டடங்களைப் பாதுகாக்கும் சாதனம் ................... .
18. உங்களால் கேட்க முடியாத உயர் அதிர்வெண் கொண்ட ஒலிகள் ................ எனப்படுகின்றன.
19. ஒரு காந்தம் .................... முனைகளைக் கொண்டது.
20. ............... குறை கடத்தியாகப் பயன்படுகிறது.
21. நீர் நிறமற்றது, மணமற்றது மற்றும் ................... .
22. குளவியின் கொடுக்கில் .................... அமிலம் உள்ளது.
23. ................. தாவரங்களில் வலைப்பின்னல் நரம்பமைவு காணப்படுகிறது.
24. ............. தசை கண்பாவையை அகலமாக்குகிறது.
25. முதுமலை வனவிலங்கு சரணாலயம் ...................... மாவட்டத்தில் அமைந்துள்ளது.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**III அ) பொருத்துக.** 5 X 1 = 5

26. குவி ஆடி - ரேடியோ தொலைநோக்கிகள்
27. பரவளைய ஆடி - பின்னோக்குப் பார்வை ஆடி
28. ஸ்நெல் விதி - கலைடாஸ்கோப்
29. நிறப்பிரிகை - $\sin i / \sin r = \mu$
30. ஒளிவிலகல் எண் - வானவில்

**ஆ) பொருத்துக.** 5 X 1 = 5

31. கிர் தேசியப் பூங்கா - மத்திய பிரதேசம்
32. சுந்தரபன்ஸ் தேசிய பூங்கா - உத்தரகண்ட்
33. இந்திராகாந்தி தேசிய பூங்கா - மேற்கு வங்கம்
34. கார்பெட் தேசியப் பூங்கா - குஜராத்
35. கன்ஹா தேசியப் பூங்கா - தமிழ்நாடு

**IV சரியா அல்லது தவறா எனக் கூறுக. தவறான கூற்றை திருத்துக.** 5 X 1 = 5

36. வெப்பக் குடுவையில் சில்வர் சுவர்கள் வெப்பத்தை வெளிப்புறத்தில் எதிரொளிக்கின்றன.
37. செவ்வாய்க் கோள் சூரியக் குடும்பத்தில் உள்ள மிகச்சிறிய கோள் ஆகும்.
38. செம்பருத்திப்பூ சாறு ஒரு இயற்கை நிறங்காட்டி ஆகும்.
39. பெண் அனோபிலஸ் கொசுக்கள் டெங்கு வைரஸ் கிருமிகளைப் பரப்புகின்றன.
40. ஃபிரையோபைட்டுகளில் ஸ்போராபைட் தாவர நிலை ஓங்கியது.

**V எவையேனும் பதினைந்து கேள்விகளுக்கு மட்டும் விடையளி.** 15 X 2 = 30

41. மோல் - வரையறு.
42. திரவ அழுத்தத்தை அளவிட உதவும் இரு கருவிகளின் பெயர்களைக் கூறுக.
43. குவிய தொலைவு - வரையறு.
44. அதிர்வுகள் என்றால் என்ன?
45. நாசாவில் பணியாற்றிய சில இந்தியர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
46. உலோகப் போலிகளுக்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.
47. வினைவேக மாற்றம் என்பதை வரையறு.
48. வேதிச் சமன்பாடு என்றால் என்ன?
49. நடுநிலையாக்கல் வினை என்றால் என்ன?
50. சங்கிலித் தொடராக்கம் என்றால் என்ன?
51. ஏதாவது மூன்று புரோட்டோசோவாக்களின் பெயர்களை எழுதுக.
52. தசைநார் என்றால் என்ன?
53. விதைத்தலின் வகைகளைப் பட்டியலிடுக.
54. அழிந்துபோன உயிரினங்களுக்கு சில எடுத்துக்காட்டுகள் தருக.
55. அறை முகவரி என்றால் என்ன?
56. சரியா அல்லது தவறா என எழுதுக. தவறான வாக்கியத்தை திருத்தி எழுதுக.
    அ) பூஞ்சைகளின் செல்சுவர் கைட்டினால் ஆனது. ஆ) பைனஸ் ஒரு மூடிய விதைத்தாவரம்.
57. **கோடிட்ட இடங்களை நிரப்புக.** அ) நீரியல் உயர்த்தி ....... விதியை அடிப்படையாகக் கொண்டு செயல்படுகிறது.
    ஆ) எளிய பாதரசமானி முதன் முதலில் .................. என்பவரால் உருவாக்கப்பட்டது.

**காரணம் கூறுக. (58, 59)**

58. வெப்பநிலைமானிகளில் பாதரசம் பயன்படுத்தப்படுகிறது.
59. பனிக்கட்டி நீரில் மிதத்தல்.
60. அமீபா படம் வரைந்து ஏதேனும் இரண்டு பாகங்களை குறிக்கவும்.

**VI சுருக்கமாக விடையளி (ஏதேனும் 5)** 5 X 3 = 15

61. தளக்கோணம் மற்றும் திண்மக்கோணத்திற்கு இடையே உள்ள வேறுபாடுகளைத் தருக.
62. மங்கள்யான் திட்டத்தின் நோக்கங்களை வரிசைப்படுத்துக.
63. மின்முலாம் பூசுதலுக்கு சில எடுத்துக்காட்டுகள் தருக.
64. உலர்பனி என்பது என்ன? இதன் பயன்களை எழுதுக.
65. அமிலங்கள் மற்றும் காரங்களுக்கு இடையேயான வேற்றுமைகள் யாவை?
66. CNG என்பதை விரிவுபடுத்தி எழுதுக. அதன் இரு பயன்களை எழுதுக.
67. பிரையோபைட்டுகளில் எத்தனை வகுப்புகள் உள்ளன? அவை யாவை?
68. சிவப்பு தரவு புத்தகத்தின் நன்மைகளை எழுதுக.

**VII விரிவாக விடையளி.** 3 X 5 = 15

69. காந்தத்தின் அன்றாட வாழ்வியல் பயன்பாடுகளைப் பட்டியலிடுக. ***(அல்லது)***
    சந்திரயான்-1 சாதனைகள் யாவை?
70. கீழ்க்காண்பவற்றின் வேதி வாய்பாட்டினை எழுதுக. அ) அலுமினியம் சல்பேட் ஆ) பேரியம் குளோரைடு இ) சில்வர் நைட்ரேட் ஈ) மெக்னீசியம் ஆக்சைடு ***(அல்லது)*** அமிலங்களின் பயன்கள் யாவை?
71. பாக்டீரியா மற்றும் அதன் அமைப்பினைப் பற்றி சிறுகுறிப்பு எழுதுக. ***(அல்லது)***
    நீர்ப்பாசன முறைகளைப் பற்றி விளக்குக.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com